**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 87/2007 |
| Prosecution Witness | : | **அ.சா.5** |
| Name | : | **விஜயகுமாரசாமி** |
| Father's / Husband Name | : | **வெள்ளையங்கிரி** |
| Address | : | **கோயம்புத்தூர், கவுண்டபாளையம்** |
| Age | : | 69/2025 |

**தேதி : 26.05.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. சாட்சியானவர் கோயம்புத்தூரில் உள்ள கவுண்டபாளையம் என்ற அவருடைய ஊரிலிருந்து அவருடைய வீட்டில் இருந்து நீதிமன்றத்திலிருந்து அவருடைய அலைபேசிக்கு அனுப்பப்பட்ட லிங் மூலம் தொடர்பு கொண்டு நீதிமன்றத்திலுள்ள Hybrid Microsoft Team செயலி மூலம் முதல் சாட்சியம் அளித்தார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது பணி ஓய்வு பெற்று கோயம்புத்தூரில் வசித்து வருகிறேன். நான் 31.05.2014 அன்று Deputy Transport Commissioner ஆக பணி ஓய்வு பெற்றேன். சம்பவ காலத்தில் 2000ம் ஆண்டு பெரம்பலூரில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் போக்குவரத்து மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணிபுரிந்தேன். கடந்த 21.03.2000ம் தேதி மாலை 4.00 மணிக்கு பெரம்பலூர் காவல்நிலைய ஆய்வாளரிடமிருந்து கிடைக்கபெற்ற வேண்டுகோள் கடிதத்தின்படி அன்றே என்னுடைய அலுவலகத்தில் வைத்து கீழ்க்கண்ட இரண்டு வாகனங்களை ஆய்வு செய்தேன். TN 46 6833 என்ற பதிவு எண் கொண்ட Suzuki Motor Cycle வாகனத்தை ஆய்வு செய்ததில் அதில் எந்த

சேதாரமும் காணப்படவில்லை. வாகனத்தின் பிரேக் 60 சதவீதம் இருந்தது. ஸ்டியேரிங் மற்றும் டயர் ஆகியவை திருப்பதிகரமாக இருந்தது. TN 46 A 0057 TVS XL 50 வாகனத்தை ஆய்வு செய்ததில் வாகனத்தின் வலதுபுற பின்பக்க கண்ணாடி சேதம் ஆகி இருந்தது.

வாகனத்தின் பிரேக் 60 சதவீதம் இருந்தது. ஸ்டியேரிங் மற்றும் டயர்களின் நிலைமை ஆகியவை திருப்பதிகரமாக இருந்தது. விபத்தானது இந்த இரண்டு வாகனங்களின் இயந்திர கோளாறினால் ஏற்பட்டதல்ல என்று சான்று வழங்கினேன். மேற்படி இரண்டு வாகனங்களுக்கும் நான் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை என்னிடம் காட்டப்படுவதுதான். **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பெரம்பலூர் மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் ஆய்வு செய்த இரண்டு வாகனங்களுக்கும் காப்பீட்டு உரிமம் அமலில் இருந்தது என்றால் சரிதான். TN 46 6833 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்திற்கு எந்தவித சேதாரமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். மேற்படி இரண்டு வாகனங்களும் நேருக்கு நேர் மோதிக்கொண்டால் மேற்கண்ட சேதாரம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. TVS XL வாகனம் சீரான வேகத்தில் சென்று புளியமரத்தில் மோதினால் வாகனத்தின் முகப்பு விளக்கு, மக்கார்டு, சக்கரம் ஆகியவை சேதம் அடைய வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. TVS XL வாகனத்தின் வலதுபுற பின்பக்கம் பார்க்கும் கண்ணாடி மட்டும் சேதம் அடைந்திருந்தது என்றால் சரிதான். புளியமரத்தில் மோதினால் மேற்கண்ட வாகனத்தின் முகப்பு விளக்கு, மக்கார்டு, சக்கரம் ஆகியவை சேதம் அடைய வாய்ப்புள்ளதுஎன்றால் சரிதான். வாகனத்தின் பிரேக் திறன் சீராக இருந்தாலும் திடீரென விபத்து ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

**மற்ற எதிரிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.